செய்தி வெளியீடு எண்: 449 நாள்: 17.06.2008

பத்திரிக்கைச் செய்தி

இன்று (17.06.2008) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களால் ஆட்டோக்களுக்கான அரசு மானியமாக ரூபாய் 1 கோடியே 49 ஆயிரத்தை, 8 வங்கிகளுக்கு காசோலை மூலம் வழங்கினார். இதன்மூலம் 402 பயனாளிகளுக்கு ஆட்டோ பர்மிட்டுகள் சென்னை மாநகரில் வழங்கப்பட்டன.

2. 10 ஆம் வகுப்பு வரை படித்த, ரு.36,000/- வரை வருட வருமானம் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், மகளிர், ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் பயன்பெறும் விதத்தில் இந்த மானியம் வழங்கப்படுகிறது. இதற்காக அரசு ரூபாய் 12.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

3. இத்திட்டத்தின்படி, ஆட்டோவின் விலையில் 25% அல்லது ரூபாய் 25,000/- இரண்டில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படும். சென்ற மாதத்தில் 3 வங்கிகளின் மூலம் வழங்கப்பட்ட கடன் தொகைக்கு 163 பயனாளிகளுக்கு ரூபாய் 40,75,000/- அரசின் மானியமாக வழங்கப்பட்டது.

4. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 565 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 41 லட்சத்து 24 ஆயிரம் மட்டும் அரசின் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றம் நாட்டில் சென்னை உள்பட 9 நகரங்களை மாசில்லா நகரங்களாக பராமரிக்க வேண்டும் என எற்கனவே உத்திரவு பிறப்பித்திருந்தது. அதனை அமல்படுத்தும் விதத்தில் இத்திட்டத்தில் வழங்கப்பட உள்ள 5000 ஆட்டோக்களும் 'திரவ எரிவாயு' (LPG) மூலம்தான் இயக்கப்பட வேண்டும் என்று தமிழக அரசு ஏற்கனவே உத்திரவு பிறப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

5. இவ்விழாவிற்கு சிறப்பு ஆணையர் மற்றும் போக்குவரத்து ஆணையர் திரு.சி.பி.சிங், தலைமை ஏற்று பேசினார். வணக்கத்திற்குரிய மேயர் திரு.எம்.சுப்ரமணியம், நிலைக்குழு (பணிகள்) தலைவர் திரு.தனசேகரன் (எ) எ.ஆர்.பி.எம்.காமராஜ், சென்னை மாநகராட்சி உறுப்பினர் திரு.ஏழுமலை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

6.பல்வேறு தொழிற்சங்கங்களின் தலைவர்கள், ஆட்டோ உரிமையாளர்கள்/ஓட்டுநர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.